DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.10/2025 | Deposition of Witness for : PW3 |
| Name : லெட்சுமி | Father/Husband Name : சிவபெருமாள் |
| Age : 69 | Village : பேய்க்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 June 2026.
Accused Present.

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் தற்போது பேய்க்குளத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அ.சா.1 ஐ தெரியும், என்னுடைய மகன் ஆவார். நான் பள்ளிக்கூடத்திற்கு சென்றதே கிடையாது. எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. கடந்த 2024 ஆம் ஆண்டு, தேதி, மாதம் ஞாபகம் இல்லை, விபத்தில் இறந்துபோனது என்னுடைய கணவர் சிவபெருமாள் ஆவார். என்னுடைய கணவர் சாலையில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது இருசக்கர வாகனம் அவர் மீது மோதியதாக என்னுடைய கொளுந்தன் இசக்கிமுத்து என்பவர் என்னிடம் தெரிவித்தார். விபத்து நடந்ததைப் பற்றி என்னுடைய கொளுந்தன் இசக்கிமுத்து என்பவர் கூறி எனக்கு தெரியும். பின்னர் லியோ கிளினிக் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாக கூறினார். பின்னர் மேல்சிகிச்சைக்காக என்னுடைய கணவரை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மறுநாள் அதிகாலை 3.30 மணியளவில் சிகிச்சை பலனளிக்காமல் என்னுடைய கணவர் இறந்துவிட்டார். இதுசம்பந்தமாக அ.சா.1 போலீசாரிடம் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

2. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய மகன் அ.சா.1 சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய கொளுந்தன் இசக்கிமுத்துவுக்கு விபத்து ஏற்பட்டது குறித்து யார் கூறியது என்றால் ஆஜர் எதிரியின் அண்ணன் கூறித்தான் தெரியும். ஆஜர் எதிரியின் அண்ணன் தான் இறந்துபோன என்னுடைய கணவரை பேய்க்குளத்தில் உள்ள லியோ கிளினிக்கில் சிகிச்சைக்காக அனுமதித்தார் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்லும்போது என்னுடைய கொளுந்தனார் இசக்கிமுத்து என்பவர் இருந்தாரா என்றால் இருந்தார். அவர்தான் விபத்து எப்படி நடந்தது என்ற விபரத்தை என்னிடம் கூறினார் என்றால் சரிதான், நான் வீட்டில் இருந்ததனால் இசக்கிமுத்து சொல்லித்தான் சம்பவம் நடந்தது தெரியும். பேய்க்குளத்தில் உள்ள மருத்துவமனையில் என்னுடைய கணவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் அந்த மருத்துவமனையில் எனது

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.29 17:18:23 +0530 

கணவருக்கு சிகிச்சை அளிக்க இயலாது என கூறியதால் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். விபத்து நடந்தது குறித்து பேய்க்குளம் மருத்துவமனையில் உள்ள மருத்துவரோ அல்லது என்னுடைய மகனோ போலீசுக்கு தகவல் கூறினார்களா என்றல் அதுகுறித்து எனக்கு தெரியாது. போலீசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் 5 அல்லது 6 நாட்கள் கழித்து விசாரித்தார்கள், சரியாக ஞாபகம் இல்லை.

3. என்னுடைய கணவர் இறந்துபோனதற்கு Insurance கம்பெனியில் இருந்து இழப்பீடு பெற்றோமா என்றால் பெற்றோம். என்னுடைய கணவர் வேறு விதமாக இறந்ததனால், Insurance வாங்க வேண்டும் என்று பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரில் நான் என்னுடைய மகனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சிக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் இறப்புக்கு எதிரி காரணம் இல்லை என்று கூறினால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.29 17:18:28 +0530

Judicial Magistrate, Sathankulam.